# திருப்பூர் மாநகராட்சி

**செ.வெ.எண். 3/2024** **நாள்: 28.11.2024**

## பத்திரிக்கை செய்தி

திருப்பூர் மாநகராட்சி 60 வார்டுகள் கொண்ட கீழ்கண்ட நான்கு மண்டலங்களாக, மண்டலம் ஒன்றுக்கு 15 வார்டுகளாக செயல்பட்டு வருகிறது. இன்நான்கு மண்டலங்களிலும் சொத்துவரி, காலியிட வரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி, பாதாள சாக்கடை கட்டணம், திடக்கழிவு மேலாண்மை கட்டணம், மற்றும் குத்தகை இனங்கள் ஆகியவைக்கான வரி மற்றும் கட்டண நிலுவை செலுத்த பொதுமக்களின் வசதிக்காக வாரநாட்கள், மற்றும் அனைத்து சனி மற்றும் ஞாயிற்றுகிழமைகளிலும் காலை 9.30 மணி முதல் மாலை 5 மணி வரை மைய அலுவலக கணிணி வரி வசூல் மையம், நான்கு மண்டல அலுவலகங்கள், செட்டிபாளையம், தொட்டிபாளையம், நெருப்பெரிச்சல், மண்ணரை முத்தணம்பாளையம், வீரபாண்டி, முருகம்பாளையம் மற்றும் பாண்டியன் நகர், ஆகிய கணிணி வரி வசூல் மையங்களில் பணமாகவோ அல்லது "ஆணையாளர், திருப்பூர் மாநகராட்சி" என்ற பெயரில் காசோலை மூலமாகவோ வரி மற்றும் கட்டணங்கள் செலுத்தலாம்.

மேலும் எளிய முறையில் கீழ்கண்ட இணையதளம் வழியாக வரி மற்றும் கட்டணங்கள் செலுத்தலாம்

| |
|---|
| Use "Quick Payment" or "Register & Login" to |
| https://tnurbanepay.tn.gov.in |

இதன்மூலம் பொதுமக்கள் தங்களது 2024-25 இரண்டாம் அரையாண்டு வரையாண வரி நிலுவைகளை உடன் செலுத்தி மாநகராட்சியால் மேற்கொள்ளப்படும் பல்வேறு வளர்ச்சி பணிகளுக்கு உதவுமாறும் திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் திரு.எஸ்.ராமமூர்த்தி அவர்களால் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

---

**வெளியீடு: மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாநகராட்சி**